

"மனோஜயம்"!
III
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “மஹஜயம்”!

இதழ் மூன்று. III

# பொருளடக்கம்

௧. மனோராஜயம்-------------------------------------------------------௧௨௯

௨. நான் ஏன் பிறந்தேன்?------------------------------------------௧௯௦

எல்லாம் நீ!



இங்கு மனைவி என்ற சேவையின் (129)
பொருளுக்கு விட்டுக் கொடுப்பதால் அங்கு விருந்து உண்டு. நாம் அடக்க நினைத்தால் உடைமையும், உரிமையும், பறிபோகும் நிலை உண்டாகும். விட்டுக் கொடுப்பதனையும் பணிவையாகவும், நம்முடைய பொறுமையாலும் நம் பக்தியால் நிறைவு பெறும்.

மனைவி என்றால், அது போகப் பொருள் அல்ல! அடிமையின் பொருளும் அல்ல! மோகப் பொருளும் அல்ல! மனைவி ஓர் சேவையின் அங்கம். இங்கு நாம், விட்டுக் கொடுத்தால், நமக்கும் விருந்து உண்டு. இங்கு நாம், அவளை அடக்கினால், அவளுள்ளும்! நம்முள்ளும்! எங்கும் உள்ள ஸ்ரீபகவான், நம்மை பல நிலைகளிலும், அடக்கி விடுவான். இது இந்த, ஏழையின் அனுபவம்.


(A) பல முறை, இதன் இல்லத்தரசிக்கு துணிமணி துவைத்து, அலசி, உலர்த்தி, மடித்தும் கொடுத்திருக்கிறது.

(B) நாம் சாப்பிட முடியாததை! அதை அவள் விரும்பி சாப்பிடுவதை, வாங்கிக் கொடுத்து அவள் உண்பதைக் கண்டு, ஆனந்தம் அடைவதுண்டு!

(C) அவள் விரும்பிய சினிமாவை, அவள் திருப்திக்காக, அவளுடன் சென்று அமர்ந்து பார்த்து, அனுபவிப்பது போல், பாவனையைக் காட்டி, இதனுடைய ஸத்ஸங்கத காட்சிகளையும், வார்த்தைகளையும், அத்தியேட்டர் திரையிலேயே, கண்டு அனுபவித்ததும் உண்டு.

இங்கு அவளுக்கு, விட்டுக் கொடுத்ததால் நம் நிறைவு குறையவில்லை என்பதை, அனுபவத்தில் உணர்ந்தது.

அங்கு தியேட்டரில் இருக்கும் உணர்வு இருக்காது. அங்கு ஸத்ஸங்கத்தில், இருக்கும் உணர்வு இருக்கும். காரணம் அடக்கம், ஆத்ம தெய்வத்வம்.




D பலமுறை, பிணியால் வரும், பாதிப்பு தாங்க முடியாமல், ஓர் அரைமணி நேரமாவது


பலபல சூடான, கடும், சுடும், வார்த்தைகளை, கொட்டும் இதன் இல்லத்தரசியின், அமைதியாக, எச்சவனமும் இன்றி! சந்தவம் இன்றி! எக்குணை தோஷமும் இன்றி! மறுவார்த்தையோ! எதிர் வார்த்தையோ! மறுப்பு வார்த்தையோ! பேசாமல் அமைதியாக அமர்ந்து கேட்டு ஆனந்திக்கும்.

அப்போது ஓர் எண்ணம் வரும்? ஓர் கடியால் புலியன், ஓர் பிணத்தை, வேக வைக்கும் போது, பிணத்தின் நரம்பு புடைத்து, எழாவண்ணம் அப் பிணத்தை, அடி அடி என அடிப்பான். அத் தடியால், பலமுறை, குத்து குத்து என குத்துவான். அப்பிணம் உணர்ச்சியற்ற, கட்டையாக இருப்பதால், அமைதியாக ஏற்றுக் கொள்ளும். அப்பிணம், எரிந்து முடியும் போது, அத்தடியையும், அதன் மேல் போட்டு விடுவான். அத் தடியும், எரிந்து சாம்பல் ஆகி விடும்.

அக்கணவன் போல்?

இந்த நடைப் பிணத்தில், உணர்ச்சி இருக்கிறதா? என அறியப்பதற்காக, இதன் மனைவி சொரூபமென்ற தடியால், அடித்து வார்த்தைகளால் குத்தியும் அறியாதிருப்பரோ? உன் கருணைக்கு, எல்லை எது? அத்தகைய கருணையால், இவ்வளவு பெரிய காரியம் செய்திரும்? என, அவளை துதித்து போற்றும்! அதனினும் மேலாக,

(131)



மாறுபி மானம்
அற்று நாமாகி
நின்றவர்க்கே!
சேறுநீ புகிபோல
ஞானநீ புகி உண்டு
என்பது எம் நந்தன் வாக்கு.
பொருள்:- மானபிமானம்
போனபின்னே! ஞானமாறு
உன்னை அருள் கிட்டும் ஜெயந்தியும்
சேர்ந்த தாயம் போல்

அக்குழந்தை (கண்மணி) பேசமுடியாமல்,
சோர்ந்து, அயர்ந்து, அப்படியே அமர்ந்துவிட்டாள்.
இந்த நிலை பார்த்தவுடன், மெதுவாக எழுந்து போய்,
ஒரு சொம்பு ஜலம் கொண்டு வந்து, அக்குழந்தைக்கு
கொடுத்து, அம்மா! ரொம்ப களைத்துப் போனாயே!
பாவம்! இந்தா இந்த ஜலத்தை குடித்து விட்டு,
மேலும் பாக்கி வார்த்தைகள் இருந்தால்,
அதையும் கொட்டிவிடு. அதை ஏன், உள்ளேயே
வைத்துக் கொண்டு, அவஸ்தைப்படவேண்டும்?
என மாறிவோடு, கனிவோடு, கேட்டதும் அக்
குழந்தையும், அப்போது அச்ஜலம், தை
எடுத்தால், அந்த ஒரு சொம்பு ஜலத்தையும்,
வாங்கி ஆறவும் குடித்து விட்டு, ஒரு வார்த்தை
மட்டும், சொல்லி விட்டு போய் படுத்துக் கொண்டது.
அவ்வார்த்தையாவது:- சொன்னதும் சரி இல்லை
சுட்டாலும் நாற்றம் இல்லை (வார்த்தையால் இவ்வ
ளவு சுட்டாலும், உம் வாயிலிருந்து, ஒரு வார்த்தையும்
வரவில்லை) நீர் ஆண் இல்லை! பெண்ணும் இல்லை! நீர்,
ஒரு ஜடம். இந்த ஜடத்தை, கட்டி அழ வேண்டியது
என் தலைவிதி! என நொந்து கொண்டு, போய் படுத்
துக் கொண்டதும் அக்குழந்தை (கண்மணி) இது
அவன் அருகில் சென்று, விசிறி கொண்டு, அந்த விசிறி
தாங்கும் அளவு விட்டு, வெளியே வந்து விட்டேன்.



(132)

விட்டுக் கொடு
பக்தியும்
பொறுமையின்
பணிவிலும் தான்

# மானஸனம்


அழிந்து நாசமாகும்!
நான் என்பது என்ற அகந்தை
நாசம் அறியாது.
தானம் அறியாமல் மானஸனம் மனோநாசம் ஆகாது.
மானஸனம் அறியாமல் மனோநாசம் ஆகாது.

குழந்தைகளே! எம்பிரான் இதற்கு மானஸனம், போக எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டான் தெரியுமா? அவன் கருணையால், பவ நாம ரூபங்கள் மூலமாக, நல்ல முறையில் பாடம் நடத்துவான். இதுவும் அன்புடனும், பணிவுடனும், உள்ளக் கனிவுடனும் தவணையில் கற்றுக் கொள்ளும்.

இவ்வனுபவங்களை, உங்களுக்கு உணர்த்துவது?

1. விட்டுக் கொடுத்தால், விக்கினங்கள் தானே மறையும்.
2. நீ முதலில் "**பணிவைக்**" கற்றுக் கொள்.
3. கர்மம் கூட "**பணிவை**" தானே செய்யும்.
4. உன் மூலமந்திரம் "**அடங்கு அடக்காதே**"
5. இம் மூலமந்திரம், இம் வேதை ஜபிக்கும் நிலை, எப்படி இருக்கும் என்றுவீர்? — எல்லாம் நீயே! இது உன் பெருமை! இது உன் கை ஆயுதம்! இது உன் கைகருவி! உன் கையால், வேறு கதியில்லை. ஆக்குவாயோ அழிப்பாயோ அது உன் வசம். எல்லாம் நீயே!

இந்நிலை முற்றும் பெறும் போது, அவனும் நாமும் ஒன்றுகிறோம், சிற வேண்டும். அந்நிலை நாசமாகாமல் அவரே நாம்! நாமே அவன்! எனும் மனோ நிலை இருக்கலாம். இதுவே மனோஜயம் ஆகும்.



(30)

# (1) தாவவிருத்தி (2) சாட்சி விருத்தி!


இவ்விரண்டும் அறியாமல் (3) அகண்ட விருத்தி ஸாத்தியமாகாது!

(1) தாவவிருத்தி என்பது ஜீவத்தன்மை!
" " மனதோடு கூடியது!
" " குணதோஷத்துடன் கூடியது!
" " நாமரூப சம்பந்தம் கொண்டது!
" " புண்ணிய பாப சம்பந்தம் கொண்டது!
" " நான், என்னுடைய, எனது! விடாதது!
" " குற்றம் குறை, பேதம், விருப்பு வெறுப்பு கொண்டது!
" " உறவு, சுற்றம், நட்பு, சொந்தம், பந்தம், பாசம், பற்று இவைகளின்,
" "பிணைப்பு! இணைப்போடு" கூடியது.

இது ஜனன மரண வித்து ஆகும்!

சந்தேக பயதுக்கத்தை உண்டு பண்ணும்! இங்கு ஆனந்தம் இல்லவே இல்லை

(2) சாட்சி விருத்தி — இது தெய்வீகத் தன்மையது!
" இது அறிவோடு கூடியது!
" இது ஸத்வகுணத்தோடு கூடியது! (நற்குணத்தோடு)




சாட்சி விருத்தி:— ஸ்ரீபகவானின் கூட்டம் (அ) சொரூபம் ஒரு கூடியது!

,, லக்ஷியவாக்கையும், அகண்ட ரக்ஷிதையும் இணைந்தது!

,, நான், என்றல், எனது முழுமையாக அற்று
எல்லாம் நீயே! உன்றல்! உனதே! என
சர்வார்ப்பணத்துடன் கூடியது!


,, குற்றம் குறை! பேதம்! விருப்பு வெறுப்பு!
அழிந்த நிலையில், "இரண்டு" பட்ட (ஸ்ரீபகவானும் பக்தனும்)
தன்மையில், மூன்றுவது இல்லாமல்
அவனே யாம்! யாமே அவன்! என்று
ஒருமித்த தன்மையோடு கூடியது!

,, உறவு, சுற்றம், நட்பு இவற்றின் சொந்தம்
பந்தம், பாசம், பற்று ஆகிய இந்த,
இணைப்பும், பிணைப்பும் அடியோடு இல்லாமல்,
தெய்வம் மனுஷ்யனாம்! என்ற நிலையும்,
தெய்வம் தோன்றுக அவன்! என்ற நிலையும்,
இவன் வாழ்வுக்கும்! இவன் சாதனைக்கும்!
"அத்வைய பந்து" என்ற நிலையில் மனித
வடிவில் நடமாடும் இறைபணியோடு கூடியது!





3 அகண்ட விருத்தி:— இது சர்வ சாட்சி விருத்தி!
இங்கு நாமரூப, ஜகஜீவ, சொரூப சந்தேக! சஞ்சல!
கலக்க பயமும் இல்லாமல்; தேவ தெய்வ சூட்சும
நாமரூப "மயக்கமும்" இல்லாததாமே!
இங்கு ஸ்ரீபகவத் "ஸ்வரூபமாம்"
மூன்றும் முடிந்து எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே
யாமே அது! என்ற "ப்ரம்மஸ்வரூபத்
தோடு" கூடியதாமே!
தன்னை வீ காணக்கூடிய, அனைத்து ஜீவ வர்க்கங்களும்,
(மனித இனத்தையும் சேர்த்து) அனைத்து "ஞானக்
கணம்" மண்ணே என்றும்; பரமாகிய மண்ணே!
மண்ணாகிய பரமமே! பரத்திற்கு அன்னியம் எதுவும்
இல்லை. பரத்திற்கு அன்னியம் நாமும் இல்லை
என்ற ஞான "உணர்வு" குன்றாத நிலையாமே.




ஓர் முக்கியம் :— மேலே சொன்னவைகளில்,
"இயக்கம்" தோற்றமேயானவை, அவை
நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல! அவை
எம்முடைய, விளையாட்டின் நிமித்தம்! எம்
நிழலாகிய, "மாயாவும்! எம்மாயாவின்,
அம்ஸ ஸ்வரூப, மாயா" மனமும்! சேர்ந்து
விளையாடும் விளையாட்டே இயக்கமாக, தோற்று
கின்ற திடவுணர்வோடு கூடியதாகும்!

ஆனால்?
அந்த நாமரூபம், யாமுமல்ல! எம்முடையதுமல்ல!
ஆனாலும், அனைத்தும், எமக்கு அன்னியமாயில்லவே
இல்லை என்ற திடவுணர்வுடன் கூடியதாகும்!
ஆனால் இங்கு ஓர் முக்கியத்தையும் உரைவாம்!!!
யாமும் "பரமும்" எம்மாயாவும் "ஜயமும்"
இணைந்த தன்மையால் முண்ணும் "காமனா" பசையும் எனஆகி



(137)

சொல் என்றால் நாமம்! பொருள் என்றால் ரூபம்! இங்கு மண் என்றால் நாமமட்டுமே உண்டு. அங்கு ரூபம் தோன்றும் பொருள் இல்லை! களிமண் என்றால் ரூபமானமண் என்றும், வேறு ரூபம் செய்ய ஏதுவான மண் என்றும் பொருள்படுவதால் நாமரூபமே ஜகம். நாம ரூபம் இல்லாததே பரம் ஆகும்.

கோடானுகோடி கோள்களும், அனந்த ஜீவசரீரங்களும், மந்திரம் காயத்ரி வர்க்கங்களும், அனைத்தும் "நாமரூபம்" என்றது எம் மாயா! அவைகளை வைத்து விளையாடுவது, மாயா எம் மனம்!

விளையாட்டு உண்டு என்றால் — நாமரூபம் உண்டு! அதன் இயக்க மாயாவும்! மாயாமனமும் உண்டு!

விளையாட்டு இல்லை என்றால் — நாமரூபம் இல்லை! அதன் இயக்க மாயாவும்! மாயாமனமும் இல்லை!!

இங்கு சொல்விளக்கத்திற்காக?

"சொல் பொருள்" என்றால், பொருள் (உருவம்) இல்லை (நாமம்) சொல் மட்டுமே உண்டு! இங்கு மாயா இல்லாத தன்மையில், வெறும் மண் மட்டுமே உண்டு. இங்கு மண் ஓர் பொருளாகும் நிலையில் இல்லை! அம்மண் என்ற சொல்லும் இல்லை என்ற தன்மையில், அகண்டம் பேரொளியாய் யாம் யாமாகவே இருக்கிறோம் என்பதே அகண்ட விளக்கம்! இப்படி உணர்வதே மனோஜயம்!

இதன் ஓர் சிறிய விளக்கம் பின்புறம் மேல் உள்ளது!




(138)

மண்ணும்! ஜலமும்! (நாமும்) (மாயாவும்) சேர்ந்தால் கனிமண்! இவ்விரண்டும் பிரிந்தால், மாயா இல்லாது ஒழியும். பரம் மண் என்ற தன்மையையும் கடந்து நம் ஸ்வய சொரூபமான அகண்டப் **பேரானந்த!** எனச் சொல்லும்! வாக்கும் எட்டாததாகிவிடும்.


(31) கோடானுகோடி மந்திரங்களை உபதேசிப்பவர் சாமானியகுரு. அதுவே நீ! நீயே அது! என சந்தேக கலக்க பயமின்றி உணர்ப்பவர் எவரோ, அவனே **"ஸத்குரு!"**

கோடானுகோடி மந்திரங்களும் **"துவைத"** நிலையில், ஸக்திகளையும்! ஸித்திகளையும்! அபார ஆற்றல்களையும்! உலகம் வியக்கத்தக்க, பேர்! புகழ்! பட்டம்! பதவி! இவைகளை கொடுக்கக்கூடியது. இவை **"மனோவிருத்தி"** சம்பந்தம் கொண்டதாகும்! மனோவிருத்தியே பிரவர்த்தியாகும். பிரவர்த்திமார்க்கத்தை, எது போதிப்பதாயினும், அது **"கர்மாவின்"** இயக்கமும் புண்ணிய பாபமும்! அதனால் வினையும், ஜனன மரண சம்பந்தம் கொண்டதாகும்! எந்த கர்மாவானாலும், ஆழ்ந்த பக்தியானாலும், கரும யோக சாதனைகள் ஆனாலும், அனித்தியம், துவைதமே யன்றி! அத்வைதமாகாது! இவைகளை போதிப்பவரே **"சாமானியகுரு"** ஆகும்!

139



நாமரூபத்தை தெரிந்து, நீ கண்ணால் காணும் அனைத்தும்,
"மண்ணுக்கு" அந்நியமில்லை என்றும்,
"அம்மண் பரந்தாற்கு" அந்நியமில்லை என்றும்,
அப்பரந்தாற்கு, "நாம்" அந்நியமில்லை என்றும்,
அத் "திட" உறுதியால் சந்தேக கலக்க, கலங்க, தூக்க
பயம் இல்லாமல், சொல்பவன் எவனோ அவனே பக்தன்.
உலக பயத்தையும், தெய்வ மயக்கத்தையும் விட்டவனே பக்தன்.
உலகம் நிலை பெயரினும், காலமே இடைகழிந்து போனாலும்,
தன் நிலை மாறாமல், மஹா மேரு போல் இருப்பவனே பக்தன்.
நாமரூப பயத்தையும், சந்தேகத்தையும், அடியோடு நாசம் செய்
எல்லாம் அவன் செயலே! அவன் பொருளே! அவனின்றி ஓர்
அணுவும் அசையாது என்று திட உணர்வோடு சூழ்,
அவனே தானாய்! தானே அவனாய்! அவனையும்! தன்னையும்
அந்த ஒன்றே ஒன்றான தத்துவம் அல்லாத,
வாக்கிலே, இணைத்து பார்த்தோர் தன்னையும்! நம்மையும்
அதனையும், ஒன்றுக்கி ஆனந்தமாக இருப்பவன் எவனோ
அவனே மனோஜயம் பெற்றவனாவான்!



32

(A) விரும்பி விரும்பி பேசாதே!

(B) நிறைய விளக்கம் கேட்காதே!


(C) ஒரு வார்த்தைக்கு, பல அர்த்தம் கொள்ளாதே!

(A) விரும்பி விரும்பி, பேசாதே:— "நான்" பேசுகிறேன் என்ற உணர்ச்சி இருக்கும் வரை; உன் "வாக்கு" விரயமே! அதை விரும்பி பேசாதே! அது அசத்திய வாக்காகும்.

(B) ஒரு கருத்து, உள்ளத்தில், தெளிவாகி விட்டால், அந்த கருத்தை ஏற்காமல்! இதுவா? அதுவா? என குழம்பாதே! அப்படி குழப்பம் ஏற்படுமாயின், இறைகுரு பக்தியின் "நம்பிக்கை" உனக்கு, இன்னமும், ஸ்திரமாகவில்லை, என உணர்.

(C) ஒரு வார்த்தைக்கு, "பலபல" அர்த்தம் பிரித்தலில், அதில் "உண்மை" நீங்காது! இந்த சர்வார்ப்பணம்; வாய்ஞானமாக இருக்கிறது. அனுபவஞானம் ஆகவில்லை என்பது, "உறுதியாகிறது!"

குறிப்பு:— "அகராதியை" பார்க்காதே.




அகராதி என்றாலே, கடும் தோஷம் உடையது.

எனும் பொருள்படும். மேலும் உலகியல் பாடம், (பட்டம்) படிப்பு, ஆராய்ச்சி மற்றும் அனைத்திற்கும்.

பலபல விளக்கம்! பலபல கருத்து! பலபல மாற்றம்! தேவைப்படுகிறது. அவை அனைத்தும், நாம ரூப, தொழில், பணம், கௌரவம், அந்தஸ்து இவைகளுடன் உங்களை, உலகில் வாழ வைக்கும். அவை "வாழ்க்கைக் கல்வி" (அல்ல) படிப்பு ஆகும்.

அதற்கு, அகராதி தேவைதான். அகராதித்தனமாக நடப்பதற்கும் தேவைதான்.

"ஆனால்?" ஆன்மிக "கல்வி" என்பது "உள் உணர்வாகும்" அது "புற" முகமாக காணவும் முடியாது. அறியவும் முடியாது. அது "சுவை" மயமானது. அது காண முடியாதது! அது உணர மட்டுமே முடியும்!!




இது "ஞான" வேட்கை உள்ளவனுக்கு, அவரவர் "மனோ" நிலைக்கு, தக்கபடி, ஸ்ரீ பகவானால், உணர்த்தக் கூடியதாகும். ஆனால்?

"அத்வைதத்தின்" சிறப்பானது, பரசொரூப அம்சமாக இருப்பதால், "அதுவே" "பர" கருணையால், "பர" ஒலியாகவும், உணர்வாகவும் உணர்த்தும் என்று, ஞானிகள் சொல்லக் கேள்வி!

அங்கு பல பல அர்த்தம் வந்தாலும், உட் கருத்து மாறுபடாது! வேறுபடாது!! அக் கருத்துக்களை, "புத்தியின்" வடிவில் நோக்கினால், குற்றம் குறை, தோன்றுவது இயல்பே!

"அறிவு" பூர்வமாக, உணர்ந்தால், ஆனந்தம் ஒன்றே தோன்றும். புத்தியின் கற்பனையை, தவிர்த்து, அறிவு பூர்வமாக, உணர்ந்தால், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பது, ஸ்திரமானால், இந்நிலையே மனோஜயம் ஆகும்!



(33) அறிவற்றோர்க்கு, அதாவது புத்திபூர்வமான

உபகமானது

வர்க்கு, நாமரூப, ஜகஜீவ, தோற்றமாய் தெரியும்.

"அறிவு" பூர்வமானவர்களுக்கு, நாமரூபம் தோற்றுருது,

"பரமக" தோற்றும்!

மனம் புத்தி சித்தத்தின் ரூபமாக, (எண்ணம்!

அவ்வெண்ணத்தின், விரிந்த கற்பனை! அக்கற்பனை

யின், ஸ்திரத்தன்மை! ரூபமாக) உவமை கண்டால்,

விதவிதமான! ரகரகமான! பலபல தோற்றங்

களான! அதிசயம், பிரமிப்பு! ஊட்டுவதான,

"பஞ்சபிராணங்களான"


இன்பமயக்க, தோற்றங்கள் தோன்றும்.

இத்தோற்றம், நாமரூப, "ஜகத்தில்" கலியே!


இங்கு, யத்பாவம் தத் பவதி! என்ற,

"ஸ்ரீமஹான்களின் வாக்குப்படி, உண்மை!

"உணமை" களின், மேலான உண்மை



மய கர்மவினையின், அடிவாரக அவஸியம் தோன்றும்!
இந்த உன் மனமே, "மயக்கமே" அத்
தோற்றமே தவிர, உண்மையில் அவை இல்லை!
என்பதே பிரமாண உண்மையாகும்! இவ்வுலக
தோற்றமெல்லாம் "மாம்ஸ" மீண்டும்!
"மனம்" பொய்மைகளுமே! உள்ளதென்பதே உண்மை.
ஆனால் பலகாலமாக, சொல்லியும்! கேட்டும்!
கேட்டும்! சொல்லியும்! "பழக்கவழக்க"!
தோஷங்களோ, மனம் பிரேமையாய், உன்னை மயக்கி இறந்து!
இது மாயா மனதின் பழக்க வழக்க தோஷமேயல்லாது
உண்மையில் இல்லை!
"ஆனால்?"
"அறிவு" உடையவர்களுக்கு எல்லாமே,
ஸ்ரீபகவானின் அருட்டியாகவும், இயக்கமாகவும்!



145

உணர்ந்த தன்மையினால், அவன் பொருள்!
என்றும், அவன் செயல்! என்றும், உணர்வு
பூர்வமாக, உணர்ந்த தன்மையினால், அவர்களுக்கு
மனமயக்கமும்! அகறவ்வரும், மனோ அசையும்!
கண்டிப்பாக இராது! இருக்க முடியாது! இருக்க
இயலாது என்பதே உண்மை! இங்கு இவர்கள்,
மனம் வேறு எந்த ஒரு தோஷ எண்ணங்களும்,
இல்லாத தன்மையால், மனோ பாரம் இல்லாமல்,
லேசாக இருப்பதால், இவர்களின் பரிபாலனத்தால்
பிரம்மார்ப்பணத்தால் எல்லாம் ஒன்றே! அது
பரமாத்ம மண்ணே! மண் ஆத்ம பரமே! என்றும்,
"ஸர்வம் பரமாத்மனே" தோன்றும்.
இப்படி மனோ பாரமின்றி, மனம் அமைதியாக இருப்பதுவே, மனோஜயம் பெற்றதின் தன்மையாகும்.



(146)

நிச்சல தத்வம் என்பது :- அசையாத! அசைக்காத ஒன்றே தத் என்ற பரமாத்மாவாகு வந்து; அதுவே த்வம் என்ற ஜீவாத்மாக இருந்து விளையாடுகிறது. ஆகவே பரமாத்மாவே ஜீவாத்மா என்று அசைக்காத, அசையாத ஸ்திரத்தன்மை பெறுவாயம்.


(34)

"ஸத்குருவின்" வாக்கியத்தை, "ஸாதுக்கள்" ஸங்கத்தில் தெளிவுபெறு.

இவ்வாக்கியத்தை, எம் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள்! ஓர் சுலோகத்தில் சொல்லும்போது,


ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்!
நிஸ்ஸங்கத்வே, நிர்மோஹத்வம்!
நிர்மோஹத்வே, நிச்சலதத்வம்!
நிச்சலதத்வமே, ஜீவன் முக்தி! என்றார்.

இந்த நான்கு ஸ்லோகங்களிலும், ஓர் மஹத்தான பொருளை, மறைத்து வைத்திருக்கிறார் எம் பிரபு. அது என்ன வென்றால்? நிச்சல தத்வத்தில் :- "தத், த்வம்!" என்பதாகும். அதாவது தத்பதத்தையும் / த்வம்பதத்தையும் சுட்டிக்காட்டுகிறார். அதாவது, ஜீவாத்மாவாகிய நீயே பரமாத்மா / என்று





உருவில் பரமாத்மாவாகிய "நீயே" ஜீவாத்மா என தோன்றுகிறாய். உண்மையில் "நீ" ஜீவாத்மா இல்லவே இல்லை! நீ பரமாத்மாவே! என அடித்து ஆணித்தரமாக! சொல்கிறேன். அதாவது "நீயே" பரமாத்மா! "நீயே" பரசொரூபம்! "நீயே" பரப்பிரம்மம். உண்மை "மயக்க" போதையான கவனக்குறைவில் "நான்!" "நான்!" "நான்!" "நான்!" "நான்!" எனப்பிதற்றிக் கொண்டு, நான் ஆண்! நான் பெண்! நான் குடும்பி என்ற சம்சாரி! நான் ஓர் பந்த "ஜீவன்!" எனப்புலம்பி! புலம்பி! புலம்பி! புலம்பி! புலம்பி! மனதால் ஆழ்ந்து போனாய்.



உண்மையில், ஸத்தியமாக சொல்கிறேன்!
நீயோர் ஜீவன் அல்ல! நீயோர் ஜீவன் அல்ல! நீயோர் ஜீவன் அல்ல!

நீ பரமாத்மாவே! நீ பரமாத்மாவே! நீ பரமாத்மாவே!

நீ பரப்பிரம்மமே! நீ பரப்பிரம்மமே! நீ பரப்பிரம்மமே!

இது "ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!"
என, ஸ்ரீ ஆதிசங்கரரும்! ஸ்ரீ ரிபு மஹாத்மாவும்! "ஸ்ருதி"யும் யுக்தியும்,
ஸத்தியப் பிரமாணமாகச் சொல்லும் இவ்வாக்கியத்தை, முறையாக ஸத்குரு வாயிலாக கேட்ட "ஸாதுக்கள்" ஸத்ஸங்கத்தில், திரும்ப திரும்ப! திரும்ப திரும்ப! திரும்ப திரும்ப! கேட்டு அப்யாசம் செய்வராக! இவ்வப்யாஸத்தால், ஸத்ஸங்கம், நித்ய ஸங்கம் ஆகும் என்றறிவீர்!




நிச்சலதத்துவம்!
நிச்சலம் :- அசைவற்ற நிலை!
தத் :- பரமாத்மா!
த்வம் :- ஜீவாத்மா!
அசைவற்ற நிலையே பரமாத்மாவும்! ஜீவாத்மாவும்! ஐக்கியமாகும் நிலை.

சத்குருவேமாக "ஸத்" வாக்கியமானது, "ஸங்" ஆகமாகுமவ் கேட்ட, அழுவது சற்று அசைவு கொடுக்கும், நிலையில் மாறுமல்) "நிஸ்ஸங்" த்யமாக, (அசைவற்றதாக) மாறும். அப்படி நிஸ்ஸங்கமாக மாறுவதால், "அஞமோஹத்தை" நாசம் செய்யும்.

மோஹம் நாசம் ஆகும் போது, நாமரூப ஜகம் கெடும்.

மோஹம் நாசமாகும் போது (நாமரூப ஜகம் கெடும் போது) மாயாமனம், நாமரூப கற்பனையை, விட்டதன்மையால், மனம் அசைவற்று நிற்கும்! இந்த அசைவற்றதன்மையையே "நிச்சலதத்வம்" என சொல்வார்கள்.

நிச்சலதத்வம் என்றால் :- "மனம் அசைவற்ற நிலையில், பரமாத்மாவே "நாம்" என்ற, அத்வைத நிலையாகும். இப்பரமாத்மாவே, நாம் என்ற நிலையே, ஜீவன் முக்தி! ஆகும் என, ஸ்ரீமஹான்கள் கூறுவர். இதுவே மனோஜயம் பெற்ற நிலைமையாகும்!



(35)

ஆத்ம ஞானமானது!

"திடமான" உள்ளத்தில் ஜனிக்கும்!

"ஸத் குரு" கருணையினால் கிடைக்கும்!

அனவரதம் "பழக்க வழக்கத்தால்" அனுபவம் ஆகும்!

அகண்ட சிவம் என்ற, "பர கருணையால்" நிலை பெறும்!

(A) திடமான உள்ளத்தில் ஜனிக்கும்!

திட உள்ளம் என்பது, பூர்வ புண்ணியமானது, "தர்மமாக" மாற வேண்டும்! இப்புண்ணியம், பலன் கருதாமல், செய்தால் கிடைக்கும். அப்பலன் கருதாதது என்பது, பலன் கருதா "கர்மாவும்" "பலன் கருதா பக்தியும்" ஆகும்! இக்கர்மாவும், இப்பக்தியும், "இவையே தர்மமாகும்!"



(151)

வெறுப்பு உண்டானால், விருப்பம் வந்தே தீரும்.
விருப்பம் உண்டானால், வெறுப்பு வந்தே தீரும்.
ஆனால்?
நிறைவு உண்டானால் தன் மீதும் விருப்பும் வெறுப்பும் உண்டாகாமல் இதுஸ்ரீ பகவான் கருணை யென்று அன்பால் நிறைந்து! அறிவால் உணர்ந்து! அதி பூரண நிறைவுடன் பேர் ஆனந்தம் உண்டாகும்.

இத்தர்மமானது, கோடி ஜன்ம சுகிர்தம்! என, ஸ்ரீமஹான்கள் சொல்வதுண்டு. அச் சுகிர்தமே இச் ஜன்மாவில் கிடைத்திருக்கிறதென, உணரும் நிலை!

(A) உள்ளக் கசிவு (கருணை) எளிமையாக இருக்கும்.

(B) நாமரூப ஜகவாழ்வில், வெறுப்பில்லாமல் நிறைவு உண்டாகும்.

(C) அவனை அடைய வேண்டும்! அது ஆகவேண்டும்! என்ற ஏக்கம் உருக்கம் அதிகமாக இருக்கும்!


(D) ஸத்குருவாக்கியத்தில், சந்தேக கலக்கமில்லாமல், பூரண நம்பிக்கை இருக்கும்.

(E) வறுமை! பிணி! சாக்காடு! இவைகளில், இது சகஜமே என்ற திட வைராக்கியம் இருக்கும்.

(F) ஸ்ரீ பகவானிடம், சர்வார்ப்பணம், பரிபூரணமாக இருக்கும்.

இவைகளையே, "தைவ குண" சம்பத்து என, சொல்லுவார்கள்.

இந்த ஆயுள் இருந்தால், ஆர்வமுள்ளோர் யத்தனமமாக மாறுகிறதென எண்ண வேண்டாம்! மான"ஸிக"தென ஸ்திரமாக நம்பலாம்! இது இவ் வேலையின் அனுபவம். மேலே கண்ட ஆறும், எவர் உள்ளத்தில், நிரந்தரமாக பிரகாசிக்கிறதோ, அவர் சத கோடி, ஜன்ம சுகிர்தம் பெற்றவர் ஆவர்! அவர் உள்ளத்தில், ஆத்ம ஞானம் ஜனிக்கும் அது ஸத்தியம்.



Ⓑ ஸத்குரு கருணையினால், கிடைக்கும்!

முன் கூறிய, வாக்கிய வாக்கியப்படி, அவ்வாறையும்! பெற்றவர்க்கே! "ஸத்குரு" தரிஸனம் கிடைக்கும்!

இங்கு ஓர் ரகஸியம்?

மேலே கூறிய ஆறும், பரிபூரணமாக பெற்றவர்க்கே, "அவர்" ஸத்குரு ஆவார்! "ஏனையோருக்கு" ஸத்குரு "ஆகார்"!

அவர்களுக்கு ஓர் பெரியவராகவோ! ஓர் ஸாதுவாகவோ! ஓர்துறவியாகவோ! ஓர் சாமியாராகவோ! ஓர்பக்தனாகவோ! சர்வசக்தியுள்ள, ஸித்தரோ! மஹாத்மாவாகவோ! இப்படி இன்னமும், பல நிலையிலுள்ள, ஓர் "மஹாபுருஷனாகவோ"! தோற்றமும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். ஓர் ஸத்குருநாதனை தரிசிக்கும் நிலையில், தம்முடைய "மனம்! வாக்கு! காயம்! (உடல்)



(153)

மனம், வாக்கு, காயம்!
என்பதை உடல், பொருள்
ஆவி எனவும் சொல்வ
துண்டு. ஆறவிட்டு
மொத்தமாக சொல்வது
என்றால் எண்ணம்!
சொல்! செயல்! ஆகிய மூன்
அவர் நிறைந்திருக்க வேண்டும்.
அனுபவமும் மாசுபட்டாலும், அர்ப்பணம் சரி இல்லையென
பொருள்படும்.

இம்மூன்றையும், சர்வார்ப்பணம், செய்த நிலையில்,

# "சந்தேகம்! கலக்கம்! பயம்!"

ஆகிய இம்மூன்றும் இல்லாத நிலையில், ஓர் பரவச,
ஆனந்தம் உண்டாகும்! உபநிஷதங்களோ! வேத
வேதாந்த, சாஸ்திரங்களோ! அறுதியிட்டு சொல்வதாவது?
ஓர் பக்குவ ஆன்மாவுக்கு, ஸத்குரு கிடைக்கும் வரைதான்;
அவன் "ஜீவன்"! ஸத்குரு கிடைத்த மறு கணமே,
அவன் ஜீவன் அல்ல! "ஜீவன்முக்தனே"
இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்! என முழங்குகிறது.
மேலும் ஓர், ஸத்குருநாதனை காண்பது மிகமிக கடினம் என்றும்;
அதே போல், நாம் ஓர் ஸத்குருநாதனிடம் "ஸத்சீடன்" ஆகுதல்!
மிக மிக மிக மிக மிக மிக கடினம் என்பர்!
சந்தேகத்தால் ஸ்ரீமஹான்கள்!
இதை படித்த உடன், அனைவருக்கும் கலக்கம், பயம், உண்டாகலாம்;
"நம்" குழந்தைகளைப் பற்றி, "நமக்கு" தெரியும்!
ஆகவே சந்தேக, கலக்க பயம் வேண்டாம்! அப்படிப்பட்ட
ஸத்சீடனுக்கு, ஸத்குரு கருணை அவசியம் உண்டு!



உ

154

அனவரதம், பழக்க வழக்கத்தால், ஸ்வய அனுபவம் கூடும்! இது வெகு வெகு முக்கியம் ஆகும். காரணம்? அன்றாட "பழக்க/வழக்க"த்தால்!

(பேச்சு) (செய்கை)

அதி அதி அதி அதி அதி அதி, "ஜாக்ரதை"யாக இருக்க வேண்டும்! ஜாக்ரதா! ஜாக்ரதா! ஜாக்ரதா! என்ற இந்த "விழிப்பு" நிலையில், அதிக கவனமாக இருக்க வேண்டும்.

பழக்க வழக்கமே, "கலிதோஷம்" ஆகும்!


இப் " " , ஜீவன் "முக்தியும்" ஆகும்!

"பு வர் சா வே ஸ்"!!!

இதற்கு விளக்கம் தேவை இல்லை!

எண்ணம்! சொல்! செயலிலும்! நாமம் அடங்கி! பிறரை எக்காரணம் கொண்டும், அடக்காமல்! பொறுமை! அன்பு! கருணை! நிதானம்! சாந்தி! இவைகளுடன், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என அம்மாவே, அகமாகவே இருப்பதுவே, ஸ்வய அனுபவம், தானே கூடும்!






இறைகருணை (155)
என்பது செயல்
உற்றது. பரகருணை
என்பது செயல் அற்றது.
ஆகவே இறை கருணையே
பர கருணை மூலமாக
செயல்படும்! இறைகருணை
ஏககுணமாகும். பர கருணை
நிர்குணமாகும். ஆகவே ஏக குணமே பர கருணை
நியதியில் செயல்பட்டு அதுவே நிர்குணமாகி விடும்.

(D) அகண்ட சிவம் என்ற பரகருணையால் "நிலை" பெற்று நாம் நாமமாய், நிற்கும்!

இங்கு ஓர் முக்கியம் என்னவென்றால்? "இறை கருணை" பெருமையில்! "பர கருணை" பெறமுடியாது, என்பதே பிரமாண உண்மையாகும்.

அதாவது, நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்கள், நான்! என்றல்! எனது என! இதுகாலபரியந்தம் புசித்து வந்த நாம்! அவைகள், நீயே! உன்னில்! உனதே என! ஸ்ரீபகவானிடம் விடாமல், "மனோபாரம்" குறையாது! மனோ பாரம் குறைந்து, மனம் வேசாகாமல், பரபாவனையாகிய, எல்லாம் ஒன்றே! அது சிவமே! அதுயாமே! யாமே அது! என்பது நிலைத்து நிற்காது! அவன் செயல்படுவான், அது செயல்படாது! ஆகவே அவன் மூலமாக, மனோபாரத்தை இறக்கி, வேசாக்கி, அதன் மூலமாக, அதை அழித்து விடலாம். அவன் வேசாக்கினையும். அதுவே அதை அழிக்க முடியும்! அது அதை அழிக்காமல் (மனம் அழிந்து மனோநாசமாகாமல்) ஆத்ம ஞானம், நிலை பெற்று நிற்காது! என்பதே, ஸ்ரீரமணரின், அனுபவமாகும். இந்நிலையில், மனோஜயம் பெறலாம்.




156

36

கோடானுகோடி, மந்திரங்களையும் தாரக்தார்ரு.
அம் மந்திரங்களை, உபதேசிக்கும், குருவையும் தந்தனவை.
என்கிறார்கள் ஸ்ரீமகான்கள்.

இதை ஓர் அணியாய் பாமல் போது?
சாற்றிக் கிடக்கும், எழு கோடி மந்திரங்களையும்.
அதை "என்ன கண்டாய்???"
↑ மாற்றிப் பிடித்து வகை அறியா மாந்தர்க்காம்
செய்த தவம்! ஆற்றில் கரைத்த புளியைப்போலும்!
என்றார் ஓர் ஸ்ரீமகான்.
மந்திரங்களிலே, பஞ்சாக்ஷரம்! சடாக்ஷரம்!
அஷ்டாக்ஷரம்! பீஜாக்ஷரம்! என இன்னமும், சக்தி
வாய்ந்த, மந்திரங்களும் உண்டு. / இவை அனைத்துமே,
சக்திகளையும்! சித்திகளையும்! ஆற்றல்களையும்! உண்டுபண்ணமுடியுமேயன்றி!
"ஞானம்" அளித்து "நான் அது" என ஆக்காது! ஆகாது! அவைவது,
அஹங்கார அபிமானங்களை அழித்து, ஆத்மஞானம் தர முடியாது!
ஆத்மஞானம் பெற்றாலொழிய, பிறவி நோய் தீராது. ஆகவே,
இம்மந்திரங்களை, "ஜபிப்பதும் சரி"!
ஓடும் ஆற்று வெள்ளத்தில், மூட்டை மூட்டையாய் "புளி"யை!
கரைப்பதும் சரி என்கிறார்! (ஆற்றில் புளியை கரைப்பது முட்டாள்தனம் என்றார்!
ஓடும்



நீ இப்படி உறியபடி மாற்றிப் பிடித்தால், நாமரூப பொருளின் குணம் உன்னை பற்றுமல் ஸ்ரீ பகவானை பற்றிக்கொள்ளும். அது அவன் பொருள் தானே! அவனுடைய இஷ்டம்! அக்குணமும் இஷ்டம்! நீ அக்குணம் உன்னை அவஸ்யம் தாவம் தாக்கு இருப்பதால் அக்குணம் பற்றும். நீ வாசிப்பதால் தீதே குணம் நாசமாகும்.

இதை "மாற்றிப்பிடி" என்றார்! அதாவது, அறியாமையினால், அதாவது, நம் கவனக் குறைவால், "மனம்" வசம் அகப்பட்ட நாம்! "வீண்" எப்படி பற்றுகிறது என உணராமல், வீணாய் நாட்களை கழிக்கின்றோம்!

அதனால், மாயாவின் அதிபதியான, ஸ்ரீ பகவானின் பொருளாக இருந்தும், நம் மனமடமையால், நான் என்னுடைய எனது என, புகுந்து புகுந்து, வினைகளை சேகரித்து, திரும்ப திரும்ப திரும்ப, ஜனனம் எடுக்கிறோம்! அவன் பொருளை, என் பொருள்! என்பது தவறு தானே? இவைகளை, மாற்றிப் பிடி என்கிறார் ஸ்ரீ மஹான்.

அதாவது எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என மாற்றிப் பிடி என்றார்! இம் மாற்றத்தின், ஒரே வாசகமாயும்! ஒரே மந்திரமாகியும்! அமைந்தது "எல்லாம் நீயே!"

என்ற, இந்த ஜீவமந்திரம், ஒன்றே போதும். இது அறியாமையின் உடைமைகளையும்! உரிமைகளையும்! நாசமாக்கிவிடும்! அங்கே அனித்ய நாமரூப குணங்களும் நாசமாவதால், நாம் நாமாக இருப்போம்.

அந்நிலையில், எல்லாம் ஒன்றே, என்ற நிலையில் இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்ற அந்நிலை கதியில், நாமும் நலம் பெறலாம். இப்படி நலம் பெறுவதையே! மனோஜயம் எனச் சொல்லலாம்!



(158)

எல்லாம் நீயே! என்றேனோ! எல்லாம் ஒன்றே! என்றேனோ! செயல்படும் அனைத்தும் செயல்படா அதையும் இணைப்பது போலாகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

(37)

நிரந்தரமான, அறிவான் "ஸம்விடம்"!

கல்பிதமான, இவ்வுலகம் தோன்றியது!

யாம் "பேரறிவான" நிலையில், இவ்வுலகம் இல்லை!

இங்கு ஓர் உண்மை?

யாம்! மனமான நிலையில், யாம் ஓர் "ஜீவன்"!

அதாவது, ஜீவாத்மா என ஆனோம்!

யாம்! அறிவான நிலையில், யாமே ஸ்ரீ "பகவான்"!

அதாவது, பரமாத்மா என ஆனோம்!

யாம்! பேரறிவான நிலையில், யாமே பரப்பிரம்மம்!

அதாவது, பர சொரூபம் என்ற "மண்" என ஆனோம்!

இம்மூன்றும் யாமே! எமக்கு அன்னியம் எதுவுமில்லை!

பரசொரூபம் என்ற நிலையின், மண் என்ற நிலையில்!

ஓர் "நாமம்" மட்டும் தரித்துக் கொண்டோம்!

வெறும் மண்ணான எமக்கு, அங்கு, எம்மால்,

எம்பிரயோஜனமும் இல்லை!



அன்னியம் இல்லாமையினால் துவைத பயமும் இல்லை.

காரணம் :- யாம் யாமாகவே, இருந்ததனாலும்,
எமக்கு அன்னியம், எவையும் இல்லாத தன்மையாலும்,
எம்மை எடுப்பாரும் இல்லை! கொடுப்பாரும் இல்லை!
வாங்குவாரும் இல்லை! அங்கு?
எம் நிழல், (யோக மாயாவை) கண்டோம்.
அந்த யோகமாயாவானது, எம் அம்சம் அணுப்பிரமாணம்,
ஏற்றுக் கொண்ட தன்மையினால், அது "வீரியமாகி"
அளவற்ற, ஆற்றல் மிக்கதாயிற்று.
"செயலற்ற யாம்" அம்மாயாவை, சேர்ந்த
தன்மையினால் (மண்ணும், ஜலமும், சேர்ந்து பிசைந்த
நிலையால் "களிமண்" என ஆனதன்மையினால்)
செயலையும்! செயல்படுத்தும் நிலையையும் எமக்கு யாமே ஆக்கிக் கொண்டு,
"செயலற்ற" ஒதுக்கிக் கொண்டோம்! அங்கு
எம் செயலுக்கு, எவரும் காரணம் இல்லை! யாம் யாமாகவே,
இருப்போமல்ல! இருக்கிறோம்! (இந்த விதமும்)



உ

இந்த நிலை "சதாசிவம் & மகேசன்"! என, வாக்கிய விளக்கத்திற்காக சொல்லலாம்! (இது மெய்க் கதை)

"உண்மையில்"!!

இங்கும், வாக்கிய விளக்கத்திற்காக, சொல்வது என்றால் :— சதாசிவம் செயலற்றது! என்றும், மகேசன் செயலுற்றது! என்றும் சொல்லலாம். காரணம்?

சதாசிவம் = அதுவாகவே அது இருப்பது!

மகேசன் = "மாயத்தை" உண்டாக்கியது!

மறைத்த "ஜகத்தாக்கி" விளையாடும் நிலையில்,

ஹயன்! ஹரி! ஹரன்! என யாமே ஆவோம்! இங்கும் இம் மூன்றும் யாமே! யாமே அவ் ஒன்றும்! இங்ஙனம்,

செயலுற்ற நிலையில் "மூன்று"! செயலற்ற நிலையில் "ஒன்று"!

இங்ஙனம் எமக்கு, நிழல் உண்டு!



(161)

ஆனால் இங்கு
ஸ்ரீபகவானின்
சொருபம் மாயாகில்லை.
அது சூட்சுமமே! ஆனாலும்
அது ஓர் "கருணை"
சொருபமாகும். அது
மயக்கும் சொருபமல்ல.
கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும்
ஓர் பேரானந்தவடிவமாகும்! ஆனால் அது பிரேமை
ஆகும்.

அந்த நிலையே "யோக மாயா" ஆகும்!

இப்போது, இச்சக்திகள் நிலையில், விஞ்ஞான நிலையில், பேரறிவு "அறிவாக" மாறியது! இதுவே ஸ்ரீபகவான் என்ற, "ஈசன்" நிலையைப் பெற்றது! இந்த அறிவானது, மனித "ஜீவ" வேடத்தின் நிலைக்கு எம்மாயாவால் "மனம்" என ஆனது! அறிவே ஸ்ரீபகவான்! ஸ்ரீபகவானே அறிவு! ஆகவே ஸ்ரீபகவான், தொழில் செய்யும் நிலைக்கு, மாயாவைப் பற்றினான்! ஆகவே மாயாவே ஸ்ரீபகவான்! ஸ்ரீபகவானே மாயா என ஆனது. ஆனால் இங்கு ஸ்ரீபகவான், மாயாவை தொடவும் முடியும்! ஸ்ரீபகவான் மாயாவை விடவும் முடியும்! ஸ்ரீபகவானின், அந்த சொருபம், மனிதன் ஆகும்! இங்கும், இம்மனிதனும் யாமே! எம் விஞ்ஞானமே கா "சாரமாக" இருக்கும் நிலைக்கும், மாயா மனதால் "பற்றப்பட்டு" போல் நடிக்கோம். அப்படி பற்றினால்தான், குணதோஷங்களை யாம் பற்ற முடியும்.



(162)


இங்கு ஓர் உண்மை. நாமாகிய ஸ்ரீ பகவான்! மனதால் பற்றப்பட்டது போல் நடிக்கிறான். அப்போதுதான் விளையாட்டு ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கும். இம்மயக்கம் போகப் போக எம் முழுநிலை கண்டு புரியும்! கூடியசீக்கிரம் மயக்கம் நீங்கும். அப்போது நாம் யார்? என்பது உணர முடியும்.

குணதோஷங்களைப் பற்றி அறிந்தான். புண்ணியபாவமும்! அதனால் ஜனன மரணமும்! பெற்று "போக்கு வரவிலை" ஆனந்தமாக விளையாடுகிறோம்! விளையாடிக் கொண்டும் இருக்கிறோம்! இங்கு ஓர் உண்மை (யாமே நீங்கள்! நீங்களே யாம்! சிலகாலத்தில் இந்த ரகஸ்யம் உணர்வீர். இது சத்தியம்) எப்படி விளங்கும் என்றால்?

மனதின் தனித்தன்மையால்; "கோர கொடூர குணங்கள். தோற்றுவதால் சோகம்! மோஹம்! பயதுக்கம். உன்னைப்போல் தோன்றுகிறது! ஆறவே உண்மையல்ல.

அம்மனதை தனிக்க விடாமல், எம் அறிவோடு! பிணைத்து இணைத்துக் கொண்டால். அங்கு மனமற்ற (நடுவில்) ஜீவத்தன்மை, போனபடியாய் யாமே ஸ்ரீ பகவானை ஸ்ரீ கர்த்தாக்களாக பிரகாசிக்கிறோம்.

இந்நிலையில், சோகம் மோஹம் பயதுக்கம் எதையும் காணோம்! ஆனந்தம் ஒன்றே தோன்றுகிறது!



மணம் குணம் (163)
உள்ளநிலையில்
திரிகர்த்தாக்களும்
தொழில் அயர்களே.
அறிவோடு உணரும்
நிலையில் திரிகர்த்
தாக்களும் ஸத்குரு
ஆகின்றனர். பேரறிவு
ஆனநிலையில் உணரும்போது
அவர்களும் அதுவும் ஒன்றே! அந்த ஒன்றேயாம்!
என பிரம்மானந்த மயமாகி இருக்கின்றோம்!

இங்குதான், எம் ஸ்ரீ திருமறைதோமா, சொல்லும் பாடல், பொருந்தும்! அப்பாடலாவது?

"நிரந்தரமான, அறிவு சொரூபமான எம்மிடமே, இந்த நாமரூப உலகம், எம் **மனமய** கற்பனையால் தோன்றியது. அப்படி கற்பனையால், தோன்றிய இந்த உலகமானது "**பரிபூரணமானஸ்**" அறிவு சொரூபமான "**யாமே**" ஆகும்! ஆகவே எல்லாமாய்! பரந்து, விரிந்து, எங்குமாய்! ஏகமாய்! தோன்றியும் தோற்றம் அற்றதும், "**நாமரூபமாய்!**" அகண்டானந்த மயமான, பரசொரூபமான! ஸ்வயம் ஜோதியான! அகண்டப் "**பேரொளி**" ஒன்றே ஸத்தியம்! அதுவே யாம்! யாமே அது! என சும்மா சுகமாயிருப்பதுவே மனோஜயம் ஆகும்!



(38) "மனம்" உண்டு என்றால் "ஜகம்" உண்டு.
"அறிவு" உண்டு என்றால்; ஜக "பேதம்", ஜீவ பேதம், இல்லை. அமைதி, சாந்தி, ஆனந்தம், உண்டு.
"பேரறிவு" உண்டு என்றால், ஜக ஜீவ நாமரூப தோற்றங்களும், தேவ தெய்வ உறைவிடமோ, உலாவிடமோ எந்த சூட்சும, நாமரூபங்களும் இல்லை. அது உண்டு.

(A) "மாயாவின்" சொரூபம் "ஜகம்" இவை நாமரூபங்களெல்லாம் அடங்கும். மாயாவின் மைந்தன், மனம் உண்டு. மனம் உண்டானால், மனதின் கர்மங்கள் உண்டு. மனதின் கர்மங்கள் உண்டென்றால், கர்மங்களின், புண்ணிய பாவமும். அதன் போக்கு வரவான, ஜனன மரணமும் உண்டு.

(B) அறிவு என்றால் ஸ்ரீபகவான். ஸ்ரீபகவானை சாட்சிநிலை. சாட்சிநிலை என்றால், தராசின் நிறை ஆகும் (தராசு) தராசு என்றால் "சமபாவனை" ஆகும்.




உ

படிக்கல்லோ! (165)
நவரத்தினக்
கற்களோ!
எல்லாம் மண்
என்ற சமயாவளியே
சாட்சி நூல் என்ற தெய்வீகம் ஆகும்!

சமயாவளி என்றால், ஓர் தட்டில் மரகத மாணிக்கம் என்ற, நவ மணிகளையும்! மறு தட்டில், "இரும்போ, பித்தளையோ, போன்ற படிக் கல்லையும்! "வைத்து!" இதுக்கு அது சரி! என்றும் அதுக்கு இது சரி! என்றும் (படிக்) கல்லையும் விலக்க முடியாத, நவரத்தின "கற்களையும்!" ஒன்றாக்கி, "பேதம் களைவதாகும்!

உ பேரறிவு என்றால், அகண்டாண்ட பாவனையாலும் இல், நாமரூப, ஜகஜீவ, அனைத்து கோடிகளையும் எந்த விசாரணையும் இல்லாமல் "எல்லாம்" "மண்ணே" என்றும் மண்ணுக்கு அன்னியம் எவையுமே இல்லை என்ற "திட உணர்வும்"!



மேலே கூறிய, தேவ தெய்வ நிலையில் கண்ட சமமாவனை என்ற படிக்கல்லும்! விலைமதிப்பற்ற, நவரத்தினக் கற்களும்! எப்படி இவ்விரண்டையும், அறிவு பூர்வமாக உணர்ந்த நிலையில்; "நாமரூப குணபேதம்" நீங்கிய நிலையில் சமம் என உணர்ந்ததும், அந்த நாமரூப குண பேதம் அகன்றதும் நீங்கி! எல்லாம் மண்ணே, மண்ணே எல்லாம்! என்ற நிலையில், அறிவையும் பேரறிவாக, தம்முள் இருப்பது இணைந்து, எல்லாம் ஒன்றே என்ற நிலையில்; ஒன்றே நடப்பது நலமே! என பரிபூரணமாகி விட்டால்; அதுவே மனோ ஜயம் ஆகும்!

39 மனோவிருத்தி இருக்கும் போது, "நாமரூப, ஜகஜீவ தோற்றங்கள்" "உண்டு" என மெய்ப்படுகிறது.

"ஆனால்???"

இந்த மனோவிருத்தி, "வரும்முன்" ஜகம் இல்லை!

" " "மறைந்தபின்" " "!

இதன் உண்மை என்ன?????



(167)

வயோதிகம்:— எனயாம் குறிப்பிட்டது 50 to 100 வருஷங்களுக்கு முந்தைய பெரியவர்களை குறிப்பிட்டோமே தவிர தற்காலிக வயோதிகத்தை குறிப்பிடவில்லை. " வயோதிகத்தை சொல்ல கூடாது.

(A) மனோ விருத்தி வராத நிலை:— **குழந்தை** பருவம்.

முறையே 1, 2, 3, வயது வரை, படுக்கை பருவம்! தவழும் பருவம்! விளையாடும் பருவம்! இக்காலங்களில், உலகம் உண்டு. ஆனால் **எமக்கு** இல்லையே! எப்படி எனக் கேட்கிறாயா? பொன் பொருள் போகம் இல்லை! உறவு சுற்றம் நட்பு இல்லை! அப்போதும் யாம், இவை அனைத்தையும் காண்கின்றோம். ஒன்றுவது, எம்மை மயக்கவில்லை! எரிக்கவில்லை! இவ்வொன்றிவாவது, எந்த "**குண விகாரமும்**" இல்லை! ஆனால் எந்த "**விவகாரமும்**" பிரச்சனைகளும் இல்லை! அதேபோல்?

(B) மனோ விருத்தி நடந்து முடிந்த நிலை:— "**வயோதிகம்!**"

கருவிகரணங்கள் ஓய்ந்து, செயலற்ற நிலை! இப்போதும் நாமருப உலகம் உண்டு! ஆனால் "**எமக்கு இல்லையே!**" எப்படி என கேட்கிறாயா?






அது சமயமும் பொன் பொருள் மயக்கம் இல்லை!
பெண் இன்ப போதை இல்லை! உறவு சுற்ற நட்பு! வருவதும்
இருப்பதும், சுகித்திருப்பதுவும், போவதும் (விளங்கவில்லை) இவை
ஒன்றும் எமக்குத் தோன்றவில்லையே ????

அது சமயம் (வாலிப நிலையில்) "யாம் என்ன" அனுபவித்தோம்?
என்ற எண்ணமே, தோன்றவில்லையே காரணம் என்ன?

அதுசமயம், என்ன செய்தோம்? எதை உண்டோம்?
என்ற, "விபரத்தையும்" கேட்டுப்போனதே!
இதன் காரணம் என்ன???

(C) மேலே சொன்ன, இவ்விரண்டுக்கும் "மத்திய" வாலிப காலத்தில், இந்த மனம் போட்ட, ஆட்டமென்ன?
பாட்டென்ன? கூத்தென்ன? நகை என்ன?
ஆர்ப்பாட்டமென்ன? குணதோஷ நர்த்தனமென்ன?

(A) மனோவிருத்தி ஆகவில்லை!
(B) மனோவிருத்தி இறந்து விட்டது!
(C) மனோவிருத்தியின் விளையாட்டு!



இதனை உணர்வதாவது?

ஓர் அன்பர் யாமகிறார் :- பிறக்கும் போது (எவரும்) கொடு வந்ததில்லை! பிறந்து மண் மேல், இறக்கும் போதும் (எவரும்) கொடு போவதும் இல்லை! இடை நடுவில், சிறு குமிழிச் செல்வம், "நம் சிவன்" தந்தது என்று, கொடுக்க அறியாது இருக்கும், இப்பண்பட மாந்தர்க்கு என் சொல்வது????

(இப்பாடல் எம் ஸ்ரீபட்டிணத்தார் பாடலாகும். இப் பாட்டையும், நம் அனுபவத்திற்காக, கொஞ்சம், மாற்றி எழுதியிருக்கிறேன். அதற்கு, இந்த ஏழையை, மன்னிக்கவும்)

எம் ஸ்ரீபட்டிணத்தார் கருத்து:- மானிடனே! நீ பிறக்கும் போதும், எதுவும் கொண்டு வரவும் இல்லை. நாளை நீ சாகும் போதும், எதையும் கொண்டு போகப் போவதும் இல்லை "பகவான்" கொடுத்த பொருளை! அவன் அன்பர்களுக்கு, கொடுத்து உதவாமல்! ஏன் இப்படி மோறை போறுத்தால், கெட்டு அழிகிறாய்?????

என, இப்பாடல் அமைந்திருக்கிறது! ஆறவி?



கண்ணா எனயாம் அழைக்கிறோம். ஆனால்நீங்களும் சிவனே! முருகா! விநாயகா என அழைக்கலாமே. அது ஒரே சமுத்திரம். யாம் கண்ணன் என்ற குடம் கொண்டு மொண்டு வைக்கிறோம். நீங்களும் உங்கள் பிரியமுள்ள குடத்தால் மொண்டு கொள்ளலாம். அங்கு குடம் வெவ்வேறு! ஜலம் ஒன்றே!

இதை, எப்படி மாற்றி அமைத்திருக்கிறோம் என்றால்?
முன் கூறிய கருத்தின்படி!


பிறக்கும் போதும் "மனோவிருத்தி" இல்லை!

இறக்கும் போதும்! ,, ,, ,, !!

இடையில் வந்து, மனோ விருத்தியால் "பெரும் தொல்லை"! ஆகவே இந்த, மனோ விருத்தியே, இல்லாமல் இருந்திருக்கலாமே? எனத் தோணுது!

ஆனாலும், இனி அதைப் பற்றி, எண்ணக் கூடாது!
ஆகவே எம் "கமலக்கண்ணா"!!

இம்மனோ விருத்தி, உன் மாயாவுடையது தானே???
அதை, நீயே எடுத்துக் கொள்! ஏற்றருள்வாய்!!
என உருகி கதறி அழுது, வேண்டி, எல்லாம் நீயே!
எல்லாம் நீயே! எல்லாம் நீயே! என அவனிடம்
ஒப்படைத்தால், அவன் ஏற்றுக் கொள்ள, தயார்
நிலையில்! இல்லை இல்லை! தாயார் நிலையில்
உள்ளான். நீங்கள் கொடுக்கத் தயாரா???????
(தாயார்நிலையில் = உங்கள் அன்னையின் நிலையில்)



குழந்தை பருவத்திலும்! வயோதிக பருவத்திலும்!

(மனோ வளர்ச்சி இல்லை / பல் முளைக்காத குழந்தை) (மனம் செயலற்று விட்டது / பல் விழுந்துவிட்ட நிலை)

இவ்விரண்டிற்கும் இடையில் "பல்" இருக்கிறது.


பல் இருக்கும் போது, முறுக்கு சீடை முதலியவை தின்னமாட்டோம்! அவை வேண்டாம்! எனச் சொல்லி, பொறுமையுடன் இருந்தால், அது "சாதனை" ஆகும்!

பொறுமையுடன் பொறுக்கா விட்டால் அது மனோ "வேதனை" ஆகும்!

அவ்விரு நிலைகளிலும், (பல் இல்லாத நிலையில்) யாம் முறுக்கு சீடை முதலியவை, தின்னமாட்டோம்! அவை வேண்டாம்! எனச் சொல்வதில், அர்த்தமே இல்லை! ஆகவே,

இப்போது, இந்நிலையில், மனோ விருத்தியானது, "கடினமாக" இருக்கும்போதே, ஸ்ரீபகவானிடம், சர்வார்ப்பணம், செய்த நிலையில், நாம் "அடங்கி" நடந்தால், மனோ விருத்தி நம்மை பாதிக்காமல், அவன் பார்த்துப்பான்!

இப்படி மனோ விருத்தியை சர்வார்ப்பணம் செய்தால், தெரிந்து வே/ மனோஜயம் ஆகும்!



(40) "ஆயமனோபேதம்" வேண்டாம்!


"ஆய ஜக ஐக்கியம்" வேண்டும்!

"ஆய" என்பதன் பொருள், அநித்தியம் என்றும், எல்லாம் என்றும், பொருள்படும்!

(1) ஆய மனோ பேதம் :— குற்றம் குறை! விருப்பு வெறுப்பு! பேதாதி பேதம்! நான்! என்றல்! என்னுடையது! உடைமை உரிமையால், மானவமானம், வெட்கம், ரோஷம் மானக்கனம், சூடு, சுரணை! தவிதோஷ கோர குணங்கள்! சொந்த, பந்த பாசம், பற்று, ஆகிய இவை அநித்தியம்

"நாமரூப குணபேதத்தால்!" உண்டாவதாகும் என ஸ்ரீ மகான்கள் சொல்லுவார்கள். நாமரூபம், தோற்றம் வரை, குண தோஷம் தோற்றத்தான் செய்யும். குண தோஷமே "ஆய மனோபேதம்" ஆகும்!

(2) ஆய ஜக ஐக்கியம் :— கண்ணால் காண்பதும்! காதுகளால் கேட்கும் தெரியும்! உணரும்! அனைத்து அண்டபிண்ட பிரம்மாண்டங்களும்! மண், மலை மற்றும் தாவர வர்க்கங்களும்! அனைத்து ஜீவ கோடிகளும் (மனித இனத்தையும் சேர்த்து) எல்லா "நாமரூபங்களும்!"



"மன, குணமற்ற" நிர்விகல்பம்,
எல்லாமே! அநித்யமே! "ஏகமான! பரம்" ஆன
மனதுக்கு! அன்னியமில்லை! என்றும்,
"மனஞ்கிய பரத்திற்கு!"
அன்னியமில்லையென்றும் திட உணர்வால், தெளிவது!
"ஆய ஜக ஐக்கியம்" ஆகும்!

(41) மனதிற்கு அதீதமாகியும்!
மாயாவுக்கு அதீதமாகியும்!
ஜாக்ர, சொப்பன, சுஷுப்தி, அவஸ்தைகளுக்கு அதீதமாகியும்!
அநித்ய "நாமரூபங்களுக்கும்" அதீதமாகியும்!
விளங்கக்கூடியதும்! அவைகளை விளக்கக்கூடியதும்!
பரசொரூப, பரப்பிரம்மமல்லவால் வேறில்லை!
என்பதே சத்தியம்! அதாவது?
மேலே கூறிய நான்கிற்குமே, நாமரூப, குண தோஷ,
"மயக்கமே!" மூலகாரணமாக, அமைகிறது.



இ

"மனோ" மய கற்பனையும், நாமரூபமே!
மூன்று அவஸ்தைகளிலும், தோற்றம் நாமரூபமே!
மாயாவின் சிருஷ்டியும் நாமரூபமே!

இந்த நாமரூப மயக்கம், எப்படி தோற்றுகிறதென்றால்?
"மாயாவின்" சிருஷ்டி, இயற்கையாகவும்!
"மனதின்" சிருஷ்டி, செயற்கையாகவும்!
அமைவதாலேயே, குழப்பமும்! பிணைப்பும் இணைப்பும்!

சேர்ந்து பின்னிவிட்டு, நாமரூப, ஜகஜீவ தோற்றத்தை,
மறக்க முடியாமலும்! மறுக்க முடியாமலும்!

விலக்க முடியாமலும்! அதுபற்றி, விளங்க முடியாமலும்!

"திரிபுடியால்" சிக்குண்டு கிடக்கிறது;
என ஸ்ரீமஹான்கள், சொல்லக் கேள்விப்படுகிறோம்!
திரிபுடி என்பது:- வினை! விதி! மனம்! என இம் மூன்றும்.
மண், பொன், பெண் என்ற மூவாசை! ஆணவம், கன்மம், மாயை என்ற
மும்மலம்! ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற முக்குணம்! பிராரப்தம்,
ஆகாமியம், சஞ்சிதம், என்ற மூவினை! ஆகிய இந்த 12 ல்
சிக்கி, இருக்கிறதென, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.




(175)

இன்றைய கலி யுகத்தில் எல்லா வித்வான்களும் வேத வேதாந்த சாஸ்திர அறிவு உடையவர்களேயன்றி ஸ்வய அனுபவம் உடையவர்கள் அல்லர். செந்நாய் போல் திரிவான் சகஜ ஞானி! என்ற ஸ்ரீ மஹான்களின் வாக்கின்படி எங்கோ சில [illegible] அனுபவ ஞானிகள் உண்டு.

விதி! மதி! மனம்! ஆகிய இம்மூன்றும், அம்பண்ணிரண்டின் இயக்கம் "நாமரூபகுணம்"! இவைகளில், சிக்கி, பின்னலிட்டு, இணைந்து, பிணைந்து, "கலந்து" விட்டபடியால் சாமான்ய ஜீவர்களாயும் பாண்டித்யம் பெற்ற, பண்டிதர் என்ற "வித்வான்"களாலும், இவைகளை அறியவோ, உணரவோ, முடியாதென்பது, மூத்த மூன்று யுகங்களிலும், வாழ்ந்து காட்டிய, ஸ்ரீ அனுபவமஹான்கள் கூறுவர்.

இவை இறை (ஸ்ரீபகவான்) இருமையையுமறி பூரணமாக பெற்ற நிலையால், சர்வார்ப்பணம் "முழுமை" பெற்றவர்களுக்கே, சாத்தியமாகும்! இந்த சர்வார்ப்பணம் முழுநிலை பெறுபவர்களுக்கு, பிரம்மார்ப்பணம் சாத்தியமாகுது என்பதும்; அந்நிலை பரிபூரணமாக பெற்றவர்களே, மனோஜயம் பெற்றவர்களாகும்!

(42) "பொருந்திசெய்"! அப்படி பொருந்தி செய்வதை, "வருந்திசெய்"!! வருந்திசெய்வதன், அனுபவத்தால் "விருந்துசெய்"!!! இதுவே ஸ்வய அனுபவம்.



(A) பொருந்திசெய் :- நாம, ரூப, குணம், குறி, காலம், தேசம், வர்த்தமானம் (எதிர்பார்ப்பு என்ற வியாபாரம்) மனம், வாக்கு, காயம் (கர்மாதாவம்) ஆகிய பத்தினையும் "சிதறுண்டு"! பிடிக்க முடியாது! பொறுக்க முடியாது! எடுக்க முடியாது! (நானாவிதமாக) "நாலாவாக" தோற்றும் அனைத்தையும், ஒன்றுபடுத்துவதே, பொருந்தியும், பொருந்தியும்! ஒன்றாக இணைப்பதாகும்.

பொருந்தி = அதுவாக இணைந்து பொருந்துவது!

பொருந்தி = நம் ஆத்மாவிடம், இணைந்து பொருந்துவது!!

இங்கு நம் ஆத்மாவிடம், பொருந்தும் போது, நமக்கு நம்மைய் அறியாமல், அஹங்காரம் மேலிடுகிறது. இது தவறான மார்க்கம் ஆகும்! ஆகவே சர்வார்ப்பணத்திறன், அதுதானாக பொருந்தும்! அப்படி பொருந்தும் போது, நம் இருப்பு அழிந்து, அவனுடைய இருப்பு, ஆகிவிட்டதன்மையால். அவனே நானாகி! நானே அவனாகி விட்டதால்/இங்கு பொருந்துவது, எம் முயற்சியும் பயிற்சியும், இல்லாமல் இயல்பாகிவிடுகிறது.



(B) வருந்தி செய் :— முன் கூறிய நிலையில், பொருந்தி செய்யும் போது, மனம் "வருந்தி முயன்றி" அது சாத்தியமாகாது. ஆகவே தான் "அழுதால்" உண்மையும் பெறலாம், அது வாதவும் ஆகலாம்.

இப்படி, அழுது பெறுவதையே, — வருந்தி செய்வது எனச் சொல்வார்கள். இதை வருந்தியும் செய்யலாம்.

வருந்திச் செய்வது :— சர்வார்ப்பணத்தில், முழுமையாக சுகவும் "பொறுமை" யுடன் காத்திருப்பதும்.


வருந்திச் செய்வது :— அழுது, கதறி, கண்ணீரையே, "காணிக்கை" ஆக்கி, மனதை வருத்தெடுப்பது.

இது எவரெவர்க்கு, எது சாத்தியமோ, அதை செய்யலாம்.

ஆனாலும் "பலன்" ஒன்றே.

(C) விரிந்து செய் :— மேலே கூறிய, இவ்விருநிலைகளிலும், மனம் பக்குவம் ஆகும் போது, நாமரூப குண தோஷம், அனைத்தும் சர்வ நாசம் ஆகியே தீரும்.






நாமரூப, குண தோஷம் நாசமானால், அங்கு நமக்கு "அந்நியம்" எதுவும் இருக்க முடியாது! இருக்க இயலாது! அங்கு நம் அறிவு "பேரறிவு" ஆனநிலையில்தான் இருக்கும். இதைப் பிரம்மார்ப்பண நிலையின், அகண்டாண்மயாவதே, இயல்பாகவும்! சாஸ்வதமாகவும் அமையும்! அந்நிலை இயல்பாகவே, அமைவதால், எங்குமாய்! ஏகமாய்! எதிலுமாய்! பரந்து "விரிந்த" நிலையாகி விடும்! இது ஒன்றுபட்ட நிலையாக இருப்பதால், முன் இரண்டு நிலையில் சுற்றியபடி, விரிந்து! விரித்து! என்ற இருநிலை இல்லவே இல்லை! இந்நிலையில் சும்மா சுகமாக இருப்பதுவே மனோஜயம் ஆகும்!

43 (A) புரையற்றால் நிர் உபாதி! (B) பிரிவற்றால் சோபாதி! (C) விரிவற்றால் மெய்ம்மை சொரூபம்! (D) தெரிவற்றால் நாம் அதுவே!

(A) புரையற்றால் நிர் உபாதி:— புரையோடுதல் என்றுவே, பிராவபக்தி கெடுவதும் கெடுப்பதும் ஆகும். பிராவபக்தில் என்றால் "பேதம்" ஆகும்! பேதம் கண்டால், ஒன்றுபடுதல் இல்லாமல், நாமரூப "குண" பேதத்தால், உண்டாகும் கஷ்ட உபாதை புரையற்ற பேதம் அற்றால் அது நிர் உபாதை. (உபாதையில்லை)






(B) பிரிவுற்றால் சோபாதி:- முன் கூறிய நிலையால், நாம ரூப, குண பேதத்தால், உலகம் வேறு, ஸ்ரீபகவான் வேறு, நாம் வேறு, காலாதீத அது வேறு, என "பிரிவின்" (பிரிவால் வரும் வினை) யால், சோகம், மோஹம், கலக்கம், பயதுக்கம், உண்டாவது இயல்பே.

(C) விரிவுற்றால் பிரம்ம சொரூபம்:- எங்குமாய், ஏகமாய், எதிலுமாய், அனைத்திலும், நாம ரூப, குண பேதம் இன்றி, அனைத்திலும், அந்த ஒன்றே, நிறைந்திருக்கிறது. அந்த ஒன்றுக்கு அன்னியமாய், எதுவுமே இல்லை. எல்லாம் பரமாகிய மன்னே, மன்னாகிய பரமே. என உணர்ந்தால் அது பிரம்மமே.

(D) தெளிவுற்றால் நாம் அதுவே:- அனைத்திலும், எல்லாவற்றிலும், (ஜக, ஜீவ, தேவ தெய்வ, தோற்றங்களிலும்) "நாமரூப குண" பேதம் மறந்து, இறந்து, எல்லாம் பரமாகிய மன்னே, மன்னாகிய பரமே. என உணர்வால் தெளிந்து, சந்தேக கலக்க பயமில்லாமல், இருப்பது ஒன்றே, நடப்பது நலமே. அது நமக்கு அன்னியமாய் இல்லை, நாம் அதற்கு அன்னியமாயில்லை, என்ற ஸ்வய அனுபவ நிலையில் "தெளிவுற்றால்" அதுவே மனோ ஜயம்.





180

44

(A) தன்னில் தான் நிலைக்காமல், கடல் அலைபோல், சலிப்பது, (ஜீவனாம் அடைவதுவே) **பந்தம்** ஆகும்!

(B) உன்னைத் தவிர, உனக்கு அன்னியமாய் **எவையும்** இல்லவே இல்லை!

(C) தனிமையானவனே! உன்னில் நீ, நிலைத்து நிற்பாயாக

(D) அப்படி நிலைத்து நிற்பதற்கு, **எந்த** தோற்றம் ஆனாலும்!

அதன் நாமரூபம், நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல!

**எம்மில் தான்** நாமரூபம், தோற்றுகிறதே யன்றி,


**நாமரூபத்தில் யாம் இல்லை!**

எனை நினைத்தால் இவ்வுலகம், உன் பார்வையில் விருந்து!


படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!
படிப்படியாக! படிப்படியாக! படிப்படியாக!

**படிப்படியாக**

**மறும்** பின் உன் அனுபவத்தில் உனக்கு மட்டுமே! **மறையும்** இது சத்தியம்!



(A) தன்னில் தான், நடித்து நிற்காமல்,
"கடல்" அப்போல் சலனம் அடைவது "பந்தம்"!
மனிதர்களோ! தாவர வர்க்கங்களோ! மற்றும்,
நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன, ஆகிய,
"84 லக்ஷம்" ஜீவகோடிகளோ!
அகிலத்து சராசரங்களும்
கோடானு கோள்களும், சூரிய சந்திராதி அனைத்து
சுடர்களோ! "நமக்கு" அன்னியமாய்,
எவையும்! எதுவும்! இல்லவே இல்லை என்பதே,
பிரமாண உண்மையாகும்! இது எப்படி என்றால்?
மேலே கூறிய இவை அனைத்தும் "மனதுக்கு"
அன்னியமாய், எவையுமில்லை, என்பதே சத்தியம்!
இந்நிலையில், நம் தாவளம் மனமே! அப்படி இருக்கும் போது,
இந்த சொந்த பந்தம், எப்படி இருக்க முடியும்? இங்கு,
"எனது" என உரிமையும்! உடைமையும்! மனதால்
பாராட்டியதாலேயே தான், இந்த சொந்த பந்தம் வந்தது.
நம் உடம்பே, நமக்கு சொந்தம், இல்லாதிருக்கும் போது
பிறிதொன்றை சொந்தம் கொண்டாடுவது, மடமையாகும்.



சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் பாசம் பற்றும்! பற்றால் புண்ணியபாப வினைகளும்! அப்புண்ணியபாப வினையால், "ஜனனமரணமும்" நமக்கு நாமே, போட்ட பின்னைப் பாசம்,


இதை ஸ்ரீ பகவானும் போடவில்லை, ஸ்ரீ மஹான்களும் அப்படி சாறவில்லை, ஆகவே?

எல்லாம் "மனமே!" பரமாகிய மனமே, மனமாகிய பரமே! அது நாமே, நாமே அது, என்னும் உறுதி நிச்சயத்தால் "மனதின்" சலன அசைவை (ஸம்ஸாரத்தை) ஒழிக்க வேண்டும்,

இதுவே "பந்த" நிவர்த்தியாகும்!

(B) உன்னைத் தவிர உனக்கு அன்னியம், எவையும் எதுவும் இல்லை!

மேலே கூறிய நிலையின், விளக்கப்படி, எல்லாம் "மன" என்பது பிரமாணமாயிற்று. அத்வைத கருத்து முடிவு, எப்படி இருக்கிறது என்றால்? "ஜகம், பரமும், ஜீவர்களும்" இரண்டும் இல்லை! என்பதே பிரமாண உண்மையாகும்.




இதில், இன்னொரு விளக்கமும், பார்க்க வேண்டும்.
ஜகம்!, பரம்!, ஜீவர்கள்! என மூன்றை குறிப்பிடுகின்றனர்.
இதில் ஜகத்தையும்!, அங்குள்ள ஜீவகோடிகளின்
சரீரங்களையும்! (மேனிகளையும் உட்பட) எல்லாம்
மண்ணே என்பது உண்மை!, மேலும் இதில் பரம்
என ஒன்றை, இணைக்கின்றனர். இப்பரம் என்பது,
"தெய்வங்கள்" குறிப்பதாகும்.
இத்தேவ தெய்வங்களை, மூன்று நிலைகளில்
பொருள் கொள்ளலாம்

"(1) பரஒளி!"

"(2) ஆகாயம்!"


"(3) ஜலம்!" என ஞானிகள் கூறுவர்.

(1) பரஒளி என்பது, பர சொரூபமாகிய, பரப்பிரம்மத்தை
அகண்டப் பேரொளி!, (அளவிடற்கரிய ஓர் ஒளி மயம்)
அப்பேரொளியில், தேவ தெய்வங்கள், ஓர் "நிறைய"
அளவுள்ள, ஒளிப்பிழம்பு எனக் கொள்ளலாம்.



(2) குடஆகாயம் என்பதை, நம்மையும் சொல்லலாம், தேவதைகளையும் சொல்லலாம். இங்கு நம்மை ஓர் "குவளை"யாகவும், தேவதைகளை "குடமாகவும்" கொள்ளலாம் அதுதான் முறை. தேவதைகள், குடமாக இருப்பதால், அதாவது நம் "எண்ண" வடிவில் இருப்பதால், அவை நமக்கென ஓர் "வடிவம்" தாங்காததால், இங்கு அளவுடன் கூடிய குடமும் கற்பனையே, ஆதலால் நாம், குவளை என்பது, தற்காலிக உண்மையே, தவிர நிரந்தர உண்மை இல்லை. இருந்தாலும் நம்மை குவளை என்பது, வினைஉடலை வைத்து, ஏற்றுக் கொள்வோம். இப்போது ஆகாயம் என்பது, யோகமாயாவாக இருப்பதால், அது இல்லாத இடம் இல்லை என்பதே ஸத்தியம். ஆகவே அந்த ஆகாயமானது, ஓர் அளவுக்கு, உட்படுகின்ற கொள்ளும் நிலையில், அவை தேவதைகள் என வைத்துக் கொள்வோம்.





(185)

③ குட ஜலம் என்பதற்கும், குட ஆகாயமே! பொருந்தும். இங்கு, அதை விளக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள். ஆனாலும் ஓர் உண்மை!

ஆகாயம் என்பது "போக்குவரவு" இல்லாதது.


ஜலம் என்பது " " உள்ளது.

ஆகவே இங்கு, தேவ தெய்வங்கள் குட ஜலமாக கொண்டாலும், அவை "ஸ்ரீ" இல்லாதவை.

ஆனால் நாம், குள ஜலமாக, கொண்டாலும், நாம் "ஸ்ரீ" வைத்திருப்பதில் உள்ளோம். இதன் விளக்கம் முன்பகுதியில் அறிந்ததே.

இனி இம் மூன்றின், ஐக்கியத்தை உணரவும்! பர ஒளியாக பார்த்தாலும், தேவ தெய்வங்களும் நாமும், ஒன்றே! நமக்கு அன்னியம் எதுவும் இல்லை!


குட ஆகாயமாகவும்! குட ஜலமாகவும் பார்த்தாலும், தேவ தெய்வங்களும் நாமும்! ஒன்றே! நமக்கு அன்னியம் எதையும் இல்லை!



ஓ தனிமையானவனே! உன்னில் நீ நிலைத்து நிற்பாயாக!

இதில் முன் கூறிய, இரண்டு நிலைகளில், உணர்ந்து பார்க்கும் போது, ஓர் உண்மை, எப்படி விளங்குகிறது என்றால்? "நாமரூபமாக" பார்க்காலும், எல்லாம் "மண்ணே" என்றும்; மண்ணுக்கு அன்னியமாய் "எதுவும்! இல்லையும்!" இல்லையென்பதே, பிரமாண உண்மையாக இருப்பதால், பரமாகிய மண்ணே! என்றும்; மண்ணாகிய பரமே! என்றும்; நாமும் அதுவே! அதுவே நாம்! என்பதும் சத்தியமே!

நாமரூபமற்ற "ஒளி"யாக பார்க்காலும். அனைத்திலும் பர ஒளியாகிய (ஆத்ம ஒளி) அகண்டப் பேரொளி! நிறைந்திருக்கிறதென்றும்; தேவதெய்வங்களுக்குள்ளும், அப் "பர ஒளியே" நிறைந்திருக்கிறதென்றும்; "நாமும்" அவ் "ஒளிக்கு" அன்னியமாயில்லையென்றும்; உறுதி நிச்சயத்தால் சந்தேக, கலக்க, காங்க, பயதுக்கம், இல்லாமல்,



187

எல்லாமே நீயாகவும்! நீயே எல்லாமாகவும்!

இருக்கும் உன் "ஞானத்தில்"

உன்னில் நீ நிலைத்து நிற்பாயாக!

D அப்படி நிலைத்து நிற்பதற்கு, எந்தத் தோற்றம்

ஆயினும்; அதன் நாமரூபம் நாமும் அல்ல!

நம்முடையதும் அல்ல! எம்பெருமான்

நாமரூபம் அனைத்தும் தோன்றிய தூயன்றி;

அந்த நாமரூபங்களில் "யாம்" இல்லவே இல்லை.

என தெளிந்தால், இவ்வுலகம் உன் பார்வையில்

இருந்து மட்டும் (பிறருக்கல்ல)

படிப்படியாக "மறையும்"!



கனவின் உதா(188)
ரண எப்படி
விழித்த உடன் இல்லையோ
அப்படி அவ்வுபாதைகளும்
ஞான விழிப்பில் மறைந்து
விட்டது. அதே போல்
கனவில் வந்து போன
பொருள்களுக்கும்
எந்த நடயமும் இல்லை.
ஆகவே எந்த விதமயமும்
பாழ்யாமாகவே இருக்கிறேன்
இந்த நாமரூப உலகம் வந்ததோ, இருந்ததோ,
அது மறைந்ததோ, முக்காலமும் எக்காலமும் இல்லை.

மண்ணில் பாண்டம் இல்லை! என்பதும்,
மண் இல்லாமல், பாண்டம் இல்லை! என்பதும் ஒத்தியமே!

"அதேபோல்"


"பரம்" ஆகிய [illegible]! இந்த! எந்த!
நாம ரூபமான, ஜக ஜீவ, சொரூப தோற்றங்களும் இல்லை!

ஆனால்???

"பரம்" ஆகிய "பாழ்" இல்லாமல், இந்த
நாம ரூபமான, ஜக ஜீவ சொரூப தோற்றங்களும் இல்லை!

ஆனால் உலகம் இருந்ததே என்றால்?
கனவில், எமக்குள்ளேயே, அனைத்து நாம ரூபங்களும்
வந்து, இருந்து, விளையாடி, எப்படி மறைந்ததோ!
அப்படி, எம்முள்ளேயே, தோன்றி மறைந்துவிட்டது!
ஆதலால், எமக்கு எந்த "உபாதைகளும்"
இல்லை அவைகள், வந்தகதைகோ! இருந்ததகதைகோ
எந்த "நடயமும்" இல்லவே இல்லை!

(189)




நாமரூபம் படிப்படியாக மாறும். (கோர குண தோஷம் மறையும்) ஒலி அலைகள் அர்த்த அனர்த்தமற்ற நிலையில் இரைச்சலாக தோன்றும். பின் இனிமையாக தோன்றும். பின் எல்லாம் தோன்றும்.

அன்பான குழந்தைகளே! "மனம்" வசம் அகப்பட்ட மாந்தருக்கு மட்டும், நாமரூப ஜக ஜீவ தோற்றங்கள் இருப்புடையதைப் போல் தோன்றும்! ஆனால் "மனம்" மறந்தானவர்களுக்கு, சிறிது காலம், நாமரூப காட்சிகள் பொம்மலாட்டமாக தோன்றும். அங்கு விகார விவகாரம் தோன்றாது! அதே போல் சிறிது காலம், சப்த நாதங்கள் அனைத்தும் "அர்த்த, அனர்த்தமற்ற" நிலையில் (விகார, விவகாரம் இல்லாமல்) கடல்! அருவி! மரஅசைவு! ஆகியவைகளைப் போன்று, ஒலி அலைகள் தோன்றும். இவைகளின், முதிர்ச்சியில், நாமரூபம் அனைத்தும் ஒளிமயமாக மாறி பிரம்மாண்டம் ஒன்றே நிலவும்! அவைகளை விளக்க, வாக்கோ! வரியோ! இல்லவே இல்லை! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே என்ற நிலையில், மனோ ஜயம் பெறுவாம்!

பாபா.

"பரிபூரண நிறைவானது!"



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்"!

"ஸத் குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்யாணம்"! "யத்பாவம் தத் பவதி"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்", ஓம்!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சூன்யம் இல்லை"!

# நான் ஏன் பிறந்தேன்?

எம் ஆனந்த குழந்தைகளே!

"இங்கு "நாம்"
பிறக்கவே இல்லை. ஆனால் "நான்" பிறந்தது
"அஹங்கார" வடிவமாக, மனதால்
மனதில் பிறந்தது. அதாவது எண்ண வடிவில்
சொந்த பந்த பாச உறவினால் புண்ணிய பாவத்தை
அனுபவிக்கவும், மீண்டும் மீண்டும் பிறப்பிறப்பை,


191



உ

நான் அற்ற நிலையில்
நீயே அவன் ஆகி!
அவனே நீ ஆகி!
அவனும் நீயும் அது ஆகி!
இருக்கும் நிலையில் நீ பிறக்கவே இல்லை!

அடையவுமே, "நான்" பிறந்ததாகும். அது இக் "கலிதோஷ" வடிவாக பிறந்தது.
நான் உண்டானால், கலியும் உண்டு! தோஷ குணமும் உண்டு! ஜனன மரணமும் உண்டு.
நாம் என்றால், கலியும் இல்லை! தோஷ குணமும் இல்லை! ஜனனமரணமும் இல்லை! "ஸ்ரீபகவான்" "நாமாக" இருப்போம்!
சொந்த பந்த பாச உறவு பிணைப்புக்காகவும் "நாம்" பிறக்கவில்லை.
போட்டி பொறாமை இவைகளின், பாடம்படிப்பு, பட்டம், பதவி, கௌரவம், அந்தஸ்து, பணம், இவைகளின், "மோஹத்திற்கும்" "நாம்" பிறக்கவில்லை.
மேலே கூறிய, இவை இரண்டும், "நாமும்" அல்ல. "நம்முடையதும்" அல்ல. ஆனால் அவை இரண்டும் "நான், என்னுடையது" ஆகும்.





இக வாஸ, தோஷ பழக்க, வழக்கத்தினால்,
வந்ததே "நான்" ஆகும்.

பிறரை கஷ்டப் படுத்துவதற்கும், நாம் கஷ்டப் படுவதற்கும், வந்ததே "நான்" ஆகும்.

கலி தோஷ வாஸனையால், வந்ததே "நான்" ஆகும்.


ஸ்ரீ பகவானை மறப்பதற்கு, வந்ததே "நான்" ஆகும்.

காம, மோஹ, போகத்திற்கு வந்ததே "நான்" ஆகும்.

மீண்டும் மீண்டும் பிறப்பதற்கே வந்ததே "நான்" ஆகும்.

விரோத, குரோத, வஞ்சகம், சூழ்ச்சி, வேஷம், மகம், சந்தேகம், சூது, கோத்திரம், ஜாதி, சமயம், ஆகிய "பேதங்கள்" வந்ததே "நான்" ஆகும்.

"அஞ்ஞானி" கவனக் குறைபால் வந்ததே "நான்" ஆகும்.



“ஸ்மரிக்க” பழக்க வழக்க ஸுக ஸங்க

குணத்தால் “நாம்” ஆகவாம்.

நாமே கெடாமலும், பிறரை கெடுக்காமலும், நலம்

தொடுக்க “நாம்” ஆகவாம்.

கலிதோஷ நிவர்த்திக்காக “நாம்” ஆகவாம்.

ஸ்ரீபகவானே நாம் ஆவதற்கு “நாம்” ஆகவாம்.

பிறவிபிறவியை தவிர்ப்பதற்கு “நாம்” ஆகவாம்.

ஏன்? ஏன்? என்ற கேள்விக்குரிய, அறிக்க “நாம்” ஆகவாம்.

நாமரூப குண தோஷம், புரிமவிடுக்க “நாம்” ஆகவாம்.

குரோதம்குரை / பேதகம் / விருப்பு வெறுப்பு / நீங்க “நாம்” ஆகவாம்.

அஹங்காரம் / அதிகாரம் / ஆதிக்கம் / அபிமானம் /

உடைமை உரிமை / இவைகளால் வரும் மானம், அவமானம்,

வெட்கம்

கூட அறுக்க வைத்ததை, ரோஷம், கெட “நாம்” ஆகவாம்.



ஆண்! பெண்!
என்ற பேதம் உன்
மனதை மயக்கியதே

எல்லாம் அவன்
குழந்தைகளே! இந்நிலையால்

இவ்வுலகத்தில் அவனே நீ ஆக முடியும்!
இது இந்நிலையின் ஸ்வய அனுபவமாகும்!

"நான்" ஒழிந்தால் "நாம்" ஆகலாம்.

" " ஜீவன் ஒழியும்.

" " ஸ்ரீபகவான் நாம் என ஆகலாம்.

ஸ்ரீபகவான் நாம் என ஆனால் "மனம்" வேலை செய்யாது.

" " " மாயா நம்முன் ஓடிவிடும்.

" " " நாமரூப மயக்கம் அழியும்.

நாமரூப மயக்கமற்ற நிலையே, ஆவரண மயக்கமும்!

விட்சேப கலக்கமும்! அற்ற மனம் "மறைந்தான"

நிலையும், அகண்டமானவையும், ஆகும்.

மனம் மறைந்தான நிலையில், அதுவே நாம்! நாம் அதுவே!

என்ற, பிரம்மான் மயானவியாகிய "பரஸ்திதி"

பரிபூரணமான நிலையாகும்! இந்நிலை பெறுவதற்கு?

195



இ வாழ்வு வேணும் என்றால் நரகமே! சாதனையில் நான் முதன்மையாக அழிந்தால் அதுவே முக்தி!

நாமறிய இகவாழ்வில், எக்கேள்வியும் கேட்காதே. நூல் வரவு செலவு! நூல் போக்கு வரவு! நூல் கொடுக்கல் வாங்கல்! நூல் பண்டமாற்று பரிவர்த்தனம்! ஒழுங்காக நடைபெறுகிறதென, "அடங்கி" இருப்பாயாக. இறை உணர்வுடன் பொறுமையுடன் "எண்ணி" காரியம் செய்தால், நல்லதே தோற்றும்! தீமை தோற்றுது! ஆத்திரம் அவசரத்துடன், ஓர் "முடிவு" எடுத்தால் சந்தேக கலக்க பயமே உண்டாகும்!

நாம் பிறந்ததே "சாதனை" செய்வதற்கே! "வாழ்" வாழ்வில்! சாதனை என்பதே சர்வார்ப்பணமே! நம் மன இஷ்டப்படி வாழ வேண்டும் என்றால், நாமே இன்ப துன்பங்களையும்! வினைகளையும்! வலிய வாங்குகிறோம். அவன் பார்த்துப்பான் என அடங்கி எண்ணுவதை எண்ணவும். அவ்வெண்ணப்படி எதிர்பார்க்காமல், அவன் கொடுக்கும்படி அமைதியாக இருக்கவே "நாம்" பிறந்தோம்! அங்கு எல்லாம் ஒன்றே! அதுவாகவே! அதுவே! இது ரகசியம். "நான்" இல்லை!

பாபா.

(196)



நீ அடங்கினால்
உலகமே ஸ்ரீபகவானும்
உன்னுள் அடங்கும்
நீ அடக்கினால் உலகம்
உன்னை அடக்கி ஒடுக்கிவிடும்
அங்கு ஸ்ரீபகவான் கிருபையும் நீ பெற முடியாது.

"நான்" என்ற ஓர் எண்ணத்தோடு கூடி,
நான் கேட்டது கிடைக்கவில்லையே! என்றும்,
நினைத்தது நடக்கவில்லையே! ";
ஏதோ ஓர் "கீமாணை" எண்ணி, எண்ணி!
மனம் குமுறி குமுறி! புண்படுவதும், அதையே
எண்ணி, எண்ணி! மனம் கலவி கொள்வதும்,
ஆழ்ந்து, ஆழ்ந்து! விஷயத்திலேயே விஷத்தையே
உண்டு, உண்டு! மரணம் அடைய நீ பிறக்கவில்லை.
எதைக் கேட்டாலும்!
எது நடந்தாலும்! எதைக் கண்டாலும்! எது
கிடைத்தாலும்! "எந்நிலையிலும்"!
இது ஸ்ரீபகவான் கருணையே என, மனம் அமைதி
பெற்று, அடங்கி ஆனந்தம் எய்தவே! நீ
பிறந்திருக்கிறாய்! நீ அடங்கப் பிறந்தாய்!
நீ அடக்கப் பிறக்கவில்லை! என்றும்
நலமே! நலமே! நலமே!
இல்லையே இல்லையே என்று,
என ஏங்கப் பிறந்தாய்! சந்தேகம்! கலக்கம்! காமம்
பயம்! துக்கம்! அடைந்து, மரணபயபீதி அடைய, பிறக்கவில்லை.
எல்லாம் நலமே! எல்லாம் நலமே!
என ஸ்ரீபகவான் நாமம்! நலம் பெறுவாய்.

[signature] பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!